முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1181

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.12.2022, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் வேலியாய் கலியுகம் தன்னில்
   அன்னதான சேவை யாற்றி உலகமக்களுக்கு
   வரம்பல தந்தருளி இந்த உலகோரை
   வாழும் காலமே ஞானியாக மாற்றும் அற்புதம் நிகழ்த்துகின்ற
2. நிகழ்த்துகின்ற அரங்கனே ஞானியே
   நிலமதனில் அரங்கமகான் உந்தனுக்கு
   உற்றதொரு சுப்ரமணியர் யானும் இனிதே
   உயர்வாய் ஞான அறிவுரை ஆசிதனை
3. ஆசிதனை சுபகிருது சிலையின் திங்கள் அருளுவேன் அரங்கனுக்கு சக்தி கூட
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 08 ம் நாள் 23.12.2022, வெள்ளிக்கிழமை)
   வரமென அரங்கன் தர்மபலம் வையகம் எங்கும் பெருகி வருதல் காண
   காணவே உலக மாற்றமெனும்
   கலியுகத்தின் மாற்றங்கள் சடுதி இந்த பேருலகில்
4. பேருலகில் தொண்டர்கள் வழியாகவும்
   பெரும் தர்மத்தின் மூலமாகவும்
   உருவெடுத்து உலகமெங்கும் ஞானயுகமாற்றம்
   உயர்வான ஞானவான்கள் கொண்டு நடக்கும்
5. நடக்குமே ஞானவான்கள் தலைமை பெருகி
   ஞான ஆட்சியும் இந்த கலியுகத்தில்
   தானாக மாற்றம் அரங்கன் தயவாலே
   தர்மத்தாலே நடந்தேறக்கூடும்
6. கூடவே அன்னதனால் கலியுக மக்கள்
   குரு அரங்கன் வாழுகின்ற ஓங்காரக்குடிலில்
   நாடியே அரங்கன் சொல் செயல்கள் வழி
   ஞானம் பயின்று தொடர்ந்து வருதல் காண
7. காணவே ஞானவான்களெனும் அடையாளமோடு
   கலியிடரை வெல்லும் அழியாமை பெற்று
   ஞானபண்டிதன் என்னருளோடு
   ஞானிகளாக மாற்றம் பெறக்கூடும்

விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–